தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477421 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk



| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2026 பெப்புருவரி 13 |

# இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கை அறிக்கை 2026 பெப்புருவரியினை வெளியிடுகின்றது

மத்திய வங்கி 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2026இற்கான அதன் முதலாவது நாணயக் கொள்கை அறிக்கையினை வெளியிட்டது. ஆண்டொன்றிற்கு இருமுறை வெளியிடப்படுகின்ற நாணயக் கொள்கை அறிக்கையானது பொருளாதாரம், குறிப்பாக பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாடு, தொடர்பிலான முன்னோக்கிய பார்வையிலமைந்த நுண்ணோக்குகள் மற்றும் எறிவுகளிற்கான இடர்நேர்வுகள் என்பவற்றினை வழங்குகின்றது. இவ்வறிக்கையின் ஊடாக, மத்திய வங்கி அதன் அண்மைய நாணயக் கொள்கைத் தீர்மானங்களிற்குப் பின்னணியிலுள்ள நியாயபூர்வதன்மையினைத் தொடர்பூட்டுவதன் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுந்தன்மை என்பவற்றினை மேம்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது.

இவ்வறிக்கையின் உள்ளடக்கமானது 2026 சனவரி மாத நாணயக் கொள்கை மீளாய்வின் போது தீர்மானத்தினை உருவாக்குவதில் நாணயக் கொள்கைச் சபையினால் பரிசீலனையிற்கொள்ளப்பட்ட தகவல்களினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

**முக்கிய பண்புகள்**

- பதினொரு மாத கால பணச்சுருக்கக் கட்டமொன்றின் நிறைவினைக் குறிக்கின்ற விதத்தில், பணவீக்கமானது 2025 ஓகத்தில் நேர்க்கணியமாகத் திரும்பலடைந்ததுடன் அதன்பின்னர் படிப்படியாகத் துரிதமடைந்தது.
- பணவீக்கமானது 2026இன் இரண்டாம் அரையாண்டளவில் 5 சதவீத இலக்கினை நோக்கி நகருமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.
- வலுவடைகின்ற உள்நாட்டுக் கேள்வியினால் ஆதரவளிக்கப்பட்டு, மையப் பணவீக்கமானது படிப்படியாக அதிகரித்து, முதன்மைப் பணவீக்க இலக்கினை அண்மித்து உறுதிநிலையடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
- பொருளாதாரத்தில் மெதுவடைந்த பணவீக்க நிலைமைகளினால் ஆதரவளிக்கப்பட்டு மத்திய வங்கி அதன் தளர்வடைந்த நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தொடர்ந்தது.
- டித்வா புயலின் தாக்கங்களிற்கு மத்தியில், பொருளாதார நடவடிக்கையில் தொடர்ச்சியான தாக்குப்பிடிக்குந்தன்மையினை முன்கூட்டிய பொருளாதாரக் குறிகாட்டிகள் சுட்டிக்காட்டுகின்றன.
- உலகளாவிய சவால்கள் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றில் மேலதிக தீவிரமடைதலானது ஒட்டுமொத்த பொருளாதாரச் செயலாற்றத்தினைப் பாதிக்கக்கூடும்.

*இணையவழி வெளியீடொன்றாகக் காணப்படுகின்ற நாணயக் கொள்கை அறிக்கையானது நாணயக் கொள்கை அறிக்கை | இலங்கை மத்திய வங்கி எனும் மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் கிடைப்பனவாகக் காணப்படுகின்றது.*